## ஈழம்: கொலைகளுக்கு யார் பொறுப்பு?

## இந்தியனா? தமிழனா?

## சோசலிசத்தில் உற்பத்தியின் விளைவு?

...ர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். 'புதிய கலாச்சாரம்' செய் ...போல அதற்கான வாய்ப்பையும் அவர்களுக்கு மறுப்பது ...ந்த அவதூறுகளுக்கு ஆப்பறையும். அதையே செய்வோம்.

...ழீழ விடுதலையை இலட்சியமாக அறிவித்துள்ள சாலை ...பனின் 'வீரநடய் அறிவியக்கம்' (1990 வரை), கேடயம் ...ஏடுகள் (1986 வரை), சமரன் (1989 வரை) ஆகியவை ...இளம்: இந்தியன்' என்று அச்சிட்டுள்ளன. ஆனால் புதிய ...கத்துக்கு எதிராக மட்டும் இப்படித் தாக்குதல் நடக்கிறது.

*...தோழர் ஒருவர் அ.இ.அ.தி.மு.க.வில் இருந்து பொதுவுட ...கட்சியில் சேர்ந்துள்ளார். அதன் பிறகு அவர் கூலிப் பிரச் ...போன்ற சமூகப் பிரச்சினையில் முதலாளிகளிடத்தில் நியா ...கேட்டதால் தோழருக்கு யாரும் வேலை கொடுப்ப ...அவர் அன்றாடக் கூலி வேலை செய்தால்தான் வயிறு ...இயலும். இதற்கு என்ன செய்யலாம்? மறைமுக ஆதரவு ...ப்பதா? அல்லது முதலாளித்துவத்தில் ஒத்துப் போவதா? ...செய்வது?*

**— நவீன் சந்திரன், திருச்சி.**

...முதலாளித்துவத்தை முழுமையாக ஒழித்துக் கட்டும் வரை ...ளின் அநியாயங்கள் வெவ்வேறு அளவுகளில் நீடிக்கவே ...ஒவ்வொரு பிரச்சினையிலும் உடனடியாகவும், தனிப் ...முறையிலும் நியாயத்துக்கான போராட்டத்தைத் துவங்கி ...பெற்றுவிட முடியாது. கூலிப் பிரச்சினையில் நியாயத்தைக் ...கூட நம்முடைய பலத்தையும் எதிரியின் பலவீனத்தையும் ...ந்தே இருக்கும். எனவே தனி ஒருவராக மோதுவதைத் ...இரகசியமான முறையில் சக தொழிலாளர்களின் ஆதர ...திரட்டி, அதன் வளர்ச்சிக்கேற்ப நியாயத்துக்கான போராட் ...படிப்படியாக உயர்த்திட வேண்டும். குறிப்பிட்ட முதலா ...வேலை செய்யவே முடியாது. அவனது அட்டூழியங்களை ...லும் சகித்துக் கொள்ளக் கூடாது என்கிற நிலை உருவாகாத ...தற்காலிக சமரசங்கள் செய்து கொள்வதும் தவிர்க்க முடி ...அப்படிச் செய்வது ஒட்டு மொத்தமாக முதலாளித்துவத் ...ஒத்துப் போவதாகாது.

*...மார்க்ஸ், லெனின், எங்கெல்ஸ், கார்க்கி, மாவோ ஆகியோ ...ல்களைப் படிக்க விரும்புகிறோம். ஆனால் 'ஆறு ரூபாய்' ...த்தில்... மேற்படி நூல்களை வாங்கிப் படிக்க இயலவில்லை. ...களிலும் கிடைப்பதில்லை. அதனால், புதிய ஜனநாயகத்தில் ...மான நூல்களை தொடராக வெளியிட முடியுமா? அல்லது ...விலையில் எங்கு கிடைக்கும் என்பதைக் கூறவும்.*

**— அன்பன் அறிவழகன், சென்னை.**

...உழைக்கும் வர்க்கத் தோழர்களுக்கு இது கடினமான பிரச்சி ...போலிக் கம்யூனிஸ்டுகள் சார்புடைய பதிப்பகங்கள் ...வாசகர்களின் ஆர்வத்தையும்கூட லாபம் ஈட்டுவதற்கான ...வாய்ப்பாகக் கருதுகின்றன. அடக்கவிலையை விட 5, 6 மடங்கு ...வைத்து விற்கின்றன. இருந்தாலும் ருசிய, சீன வெளியீடுக ளுக்காக அவற்றையே பயன்படுத்த வேண்டியுள்ளது. போதிய மூலதனமும் வாய்ப்பு வசதிகளும் இல்லாததால் புரட்சிகர அமைப் புகள் எல்லா நூல்களையும் வெளியிட இயலவில்லை. இயக்கத் துக்கு உடனடி அவசியமான நூல்களை மட்டுமே, கூடியவரை குறைவான விலையில் வெளியிட முயன்று வருகிறோம். நடப்பு அரசியலுக்கு முக்கியத்துவமளிக்கும் குறைந்த பக்கங்களையே கொண்ட புதிய ஜனநாயகத்தில் அவற்றை வெளியிட இயலாது. பரவலான மக்கள் திரள் வாசகர்களை அடைய விரும்பும் ஏட்டின் பரிமாணத்துக்கும் அது பொருத்தமான பணியாகாது. அதைவிட முக்கியமாக பின்வரும் வழியை நாம் வலியுறுத்துகிறோம். ''ஒருத் தனுக்குத் தலைச்சுமை பத்துப் பேருக்குப் பல்லுக்குச்சி'' என்பார் கள். தனியொருவராக முயலுவதைவிட மற்ற சிலரோடு சேர்ந்து சாத்தியமான சிறு தொகையைக் கொண்டு நூல்கள் வாங்கிப் படிப் பது, பகிர்ந்து கொள்வது எளிதானது. தனி மனிதப் போக்கைக் கைவிட்டு அமைப்பு சார்ந்து சிந்திப்பதும் செயல்படுவதும் இன்ன மும் சிறப்பானது. இது போன்ற பல பிரச்சினைகளையும் அது தீர்க்கும்.

● *தமிழரசன் இயக்கம் அழிந்துவிட்டதா அல்லது இயங்குகின் றதா? அவருடைய கொள்கை சரியானதா?*

**— ஜோசப், மத்திய சிறை, கடலூர்.**

○ அழிந்துவிடவில்லை. இன்னும் சிலர் அந்த இயக்கத்தை நடத் துகிறார்கள். தமிழ்த் தேசிய இனம் ஒடுக்கப்படும் வரை, தமிழ்த் தேசிய இனத்துக்கு சுயநிர்ணய உரிமை கிட்டும் வரை அதற்கான அடிப்படையை யாரும் அழித்துவிட முடியாது. தமது இயக்கத்தின் நண்பர்களையும் எதிரிகளையும் வரையறுப்பதிலும், இயக்கத்தின் பாதையை வகுத்துக் கொள்வதிலும் செயல்படுத்தியதிலும் தமிழர சன் பின்பற்றிய கொள்கை தவறானது.

● *பிரபாகரன் உயிருடன் இருக்கின்றாரா அல்லது இறந்துவிட் டாரா? புலிகளின் போக்கை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா?*

**— ஜோசப், மத்திய சிறை, கடலூர்.**

○ பிரபாகரன் உயிருடன்தான் இருக்கிறார். அவர் இறந்துவிட் டார் என்கிற வதந்தியை 'ரா'வும், காங்கிரசும், ஈழத் துரோகிகளும், போலிக் கம்யூனிஸ்டுகளும், இந்தியக் 'கிசுகிசு' ஏடுகளும், கூலிப் பிரச்சாரகர்களும் தான் பரப்பி வருகிறார்கள்.

சிங்கள இன ஒடுக்குமுறையையும், இந்திய ஆக்கிரமிப்பை யும் எதிர்த்துப் போரிடும் தன்மைகளில் மட்டும் தான் புலிகளை ஆதரிக்க முடியும். மற்றபடி அதன் இனவெறி, பாசிசப் போக்கு களை ஆதரிக்க முடியாது.

● *அமிர்தலிங்கம், யோகேஸ்வரன், உமா மகேஸ்வரன் ஆகி யோரை சுட்டுக் கொன்றது யார்?*

**— ஜோசப், மத்திய சிறை, கடலூர்.**

○ முகுந்தன் என்ற உமா மகேஸ்வரனை அவருடைய குழுவைச் சேர்ந்த அதிருப்தியுற்ற சிலரே, அவருடைய 'தோழமைக் கொலை கள்' கண்டு ஆத்திரமுற்று சுட்டுக் கொன்று பழிதீர்த்தனர்.

அமிர்தலிங்கம், யோகேஸ்வரன் கொலைகளுக்கும், தமக்கும் சம்பந்தமில்லை, கொலையாளிகள் தமது அமைப்பிலிருந்து ஏற்க னவே வெளியேறியவர்கள் என்று அப்போது புலிகள் கூறினர். ஆனால் அக்கொலைகளுக்காக கடந்த மாதம் புலிகள் தாமே உரிமை பாராட்டிக் கொண்டனர். துரோகிகளின் சாவு இறகைவிட லேசானதாகவே கருதமுடியும்; ஆனால் அதற்குரிய உரிமை பாராட்டுவதில் புலிகளுக்கு என்ன தடுமாற்றம், தயக்கம்?

எதிரிகள் - துரோகிகள் அல்லாதவர்கள், பகைமையற்ற முரண்பாடுகளும், கருத்து வேறுபாடுகளும் கொண்டவர்களைக் கூட பாசிச முறையில் கொல்வதை புலிகள் வழக்கமாக்கி விட்டார் கள். குறிப்பாக கடந்த செப்டம்பரில் யாழ் பல்கலைக்கழக உடற்கூற் றியல் பேராசிரியை டாக்டர் இராஜினி திரணகமவைச் சுட்டுக் கொன்றுவிட்டு ஈழத் துரோக குழுக்கள் மீது பழிபோட்டு புலிகள் தாமே முதலைக் கண்ணீர் வடித்தனர். இந்திய இராணுவ ஆக்கிர மிப்பு, மனித உரிமை மீறல்களில் புலிகளின் பங்குபற்றி விமர்சித்து இராஜினி நூல் எழுதியதுதான் காரணம். இப்படிப்பட்ட பாசிசக் கொலைகள் புலிகளின் வழமையான செயல் என்று தெரிந்துவிட்ட தால் அவர்கள் ஈழத் துரோகிகளைத் தண்டிப்பதைக்கூட நியாயப்ப டுத்த முடியவில்லை.